198

ஸ்ரீ

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ரெக்ஷா கம்ம மஹாஜன அபிவிர்த்தி சங்கம்

கோவில்பட்டி.

# லோக்கல் செல்வ் கவர்ன்மெண்டும்

# கிராம வாசிகளும்.

5 - JAN 1924

கிருஷ்ணபுரம்

கி. அழகிரிசாமி நாயுடு,

எழுதியது.

சாத்தூர்

சுப்பிரமணிய விலாஸம் பிரஸில்,

பதிப்பிவிக்கப்பட்டது.

1923.

ஸ்ரீ

பெரியோர்களே!

ஸ்ரீராஜகோபாலன் திருவருட் கடாட்சத்தால், தெக்ஷிண கம்ம மஹாஜன அபிவிர்த்தி சங்கம் என்ற நாம தேயத்துடன் நடை பெற்று வரும் நம் ஜாதிய சங்கத்திற்கு, மனத்தாலும், வாக்காலும், சரீரத்தாலும் என்னாலியன்றவரை, என்சிற்றறிவிற் கெட்டிய மட்டும் ஊழியம் செய்து, நம் குலப்பெரியோர்களது ஆன்பிற்கும், அபிமானத்திற்கும், உரியவனாகச் செய்து கொள்ள வேண்டுமென்பதே எனது விருப்பம். அதை நிறைவேற்ற வேண்டியது பெரியோர்களின் கடமையாகும்.

என்னுடைய மனமொழிகளாற் செய்யவேண்டிய ஊழியங்களில் இச்சிறுபுத்தகத்தின் மூலமாய் வெளியிட்டிருக்கும் ராஜீய சம்மந்தமான விஷயங்களும், ஒன்றென்பது எனது துணிபு.

பொதுஜன நன்மைக்காகச் செலவு செய்யவேண்டிய பணங்களை ஒதுக்கிவைத்து, செலவு செய்யவேண்டிய பாவத்துக்களைக் குறிப்பிட்டு, அவசியமான சந்தற்பங்களில் ஜனங்களிடம் வரி வசூல்செய்து கொள்வதற்குரிய விதிகளை ஏற்படுத்தி, அவைகளைப் பொது ஜனங்களுக்கனுகூலமான மார்க்கங்களிற் செலவு செய்யும் பொருட்டு பொது ஜன சபைகளை ஏற்படுத்தியிருக்கின்றனர்.

அச்சபைகளின் மூலமாயடையவேண்டிய லாப நஷ்டங்களின் பொறுப்புக்கள் பெரும்பாலும் விவசாயிகளையே சார்ந்திருப்பதால், அச்சபைகளுக்கனுப்பு வேண்டிய மெம்பர்களைத் தெரிந்தெடுக்கும் சுதந்தரத்தைப் பெரும்பாலும் விவசாயிகளுக்கே கொடுத்திருக்கின்றனர்.

இச்சபைகளின் மூலமாகப் பொதுஜனங்களடைய வேண்டியலாப நஷ்டங்களை விவசாயிகளாகிய நாமே முன்னணியிலிருந்து அடைய வேண்டியவர்களாக இருக்கிறோம்.

பொதுஜன சபைகளில், இந்திய மாகாண சட்டசபைகளைப் பற்றிமட்டும், எனக்கெட்டியவரை இச்சிறுபுத்தகத்தின் மூலமாகத் தங்களுக்கு ஞாபகப்படுத்தியிருக்கிறேன்; மற்றும் ஒவ்வொரு சபையைப்பற்றியும் கூடிய சீக்கிரத்தில் என் போன்ற சாதாரணஜனங்களுக்குத் தெரிவிக்கவேண்டுமென்ற விருப்பம் எனக்கில்லாமற் போகவில்லை.

## குலாபிமானிகளாகிய பெரியோர்களே!

நான் தங்களிடம் கேட்டுக் கொள்வதென்ன வென்றால், குலத்தொண்டு புரியும் என்போன்றவர்களுக்கு மென்மேலும் ஊக்கமுண்டாகும்படி நம்மவர்கள் ஒவ்வொருவரும், 31–10–23ல் நடைபெறும் சென்னை சட்டசபை எலெக்ஷன் போட்டியில், நம்முடைய பிரதிநிதியைத் தெரிந்தெடுத்தல் சம்மந்தமாகத் தங்கள், அன்பையும் அபிமானத்தையும், வெளிப்படையாகத் தெரியச்செய்து, நமக்குள்ளிருக்கும், அபிப்பிராய பேதங்களையும், மனஸ்தாபங்களையும் பாராட்டாமல், பெரியோர்களால் நியமிக்கப்பட்ட நமது சங்கத்திற்குப் பெருமையுண்டாகும் வண்ணம் நமது ஒற்றுமையை இம்மாகாண முழுவதும் தெரியும்படி செய்வதுடன் ஆந்திர நாட்டிலுள்ள நம்மவர்களுக்கு நம் சங்கத்தின் பேரில் சந்தோஷமுண்டாகும்படி தாங்களோவ்வொருவரும் நடந்துகொள்ள வேண்டுமென்று பிரார்த்திக்கும்.

தங்கள் ஊழியன்

கி. அழகிரிசாமி.

கோவில்பட்டி
ஸ்ரீ 9—10—23.

# தெக்ஷண கம்ம மஹாஜன அபிவிர்த்தி சங்கம்
கோவில்பட்டி.

# லோக்கல் செல்வ் கவர்ண்மெண்டும் கிராமவாசிகளும்.

1884-ம் வருஷம் முதல் நம் தேசத்தின், மேதாவிகளால் கவர்ண்மெண்டார் மீது அடிக்கடி சொல்லிக் கொண்டுவரும் குறைகளுக்கு, ஒருவாறு சமாதானம் ஏற்படலாமென்ற நோக்கத்துடன், 1920-ம் வருஷத்தில், இந்தியா முழுமைக்கும் அரசியல் சம்மந்தமாக ராஜாங்கத்தாரால் சில சீர்திருத்தங்கள் செய்யப்பட்டிருக்கின்றன; ஷெ சீர்திருத்தங்களின்பிரகாரம், நிர்வாக சம்மந்தமான விவகாரங்களை நடைபெறும்படி செய்வதற்காக, ஒவ்வொரு மாகாணத்திற்கும், ஒரு சட்ட நிரூபண சபையும், ஒரு நிர்வாகசபையும், ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. ஷெ சட்டசபைகளில் ஜனங்களால் தெரிந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளே அதிகத்தொகையுள்ளவர்களாக இருக்கவேண்டுமென்று தீர்மானித்திருக்கின்றனர்.

அதுபோலவே, இந்தியாமுழுமைக்கும் உள்ள எல்லா நிர்வாகங்களையும் நடைபெறும்படி செய்வதற்காக, இன்னும் இரண்டு முக்கிய சபைகளையும் ஏற்படுத்தியிருக்கின்றனர். அவைகளில் ஒன்றுக்கு கவுன்சில் ஆப் ஸ்டேட்ஸ் (Council of States) என்று பெயர். இச்சபையில் கவர்ண்மெண்டாரால் நியமிக்கப்பட்ட 27 மெம்பர்களும், 1500 ரூபாயும் அதற்குமேலும் தீர்வை செலுத்தக்கூடிய கனவான்களால் தெரிந்தெடுத்தனுப்பிய 33 மெம்பர்களும், சேர்த்து மொத்தம் 60 மெம்பர்களிருக்கிறார்கள். ஷெ 33 மெம்பர்களும் ஒவ்வொரு மாகாணத்திலிருந்தும் இதனடியிற்கண்ட விகிதப்படி தெரிந்தெடுத்தனுப்பப்பட்டிருக்கின்றனர்.

# The Council of States.

## கவுன்சில் ஆவ் ஸ்டேட்ஸ்.

## (ராஜாங்க சபை, டில்லி.)

| மாகாணங்கள். | பொது தொகுதிகள். | | ஸ்பெஷல் தொகுதிகள். | மொத்தம். |
|---|---|---|---|---|
| | மகம்மதியரல்லாதவர். | மகம்மதியர்கள். | ஐரோப்பிய வர்த்தகர்கள். | |
| 1. Madars சென்னை … …. | 4 | 1 | … | 5 |
| 2. Bengal பெங்கால் …. …. | 3 | 2 | 1 | 6 |
| 3. Behar and Orissa பீஹார் ஒரிஸ்ஸா …. | 2 | 1 | … | 3 |
| 4. Bombay பம்பாய் …. …. | 3 | 2 | 1 | 6 |
| 5. Burma பர்மா …. … | | பொது 1 | 1 | 2 |
| 6. Central Provinces மத்தியமகாணங்கள் | (பொது) 1 | | … | 1 |
| 7. Punjab, பஞ்சாப் (சிக்கியர் 1) …. | 2 | 2 | … | 4 |
| 8. United Provinces. ஐக்கிய மாகாணம்…. | 3 | 2 | … | 5 |
| 9 Assam அஸ்ஸாம் (பொது 1) … | | 1 | … | 1 |
| 10. கவர்ண்மெண்டாரால் நியமிக்கப்பட்ட மெம்பர் … | … | … | … … | 27 |

ஆக 60.

மற்றொரு சபைக்கு லெஜிஸ்லேட்டிவ் அசேம்பிளி என்று பெயர்; இச்சபையில் மொத்தம் 144 மெம்பர்களிருக்கின்றனர். அவர்களில் 41 பேர் கவர்ண்மெண்டாரால் நியமிக்கப்பட்டவர்கள். பாக்கி 103 மெம்பர்களும், 50 ரூபாய்க்கு மேல் தீர்வை செலுத்தும் ஜனங்களால், ஒவ்வொரு மாகாணத்திலிருந்தும் இதனடியிற்கண்ட விகிதப்படி தெரிந்தெடுத்தனுப்பப் பட்டவர்களாக இருக்கின்றனர்.

| | | | |
|---|---|---|---|
| சென்னை .... .... | 16 | டில்லி .... .... | 1 |
| அஸ்ஸாம் .... .... | 4 | பஞ்சாப் .... .... | 12 |
| பெங்கால் .... .... | 17 | ஐக்கிய மாகாணங்கள் | 16 |
| பீகார், ஒரிஸா .... | 12 | | |
| பாம்பே .... .... | 16 | ஆக .... | 103 |
| மத்தியமாகாணம் .... | 5 | கவர்ண்மெண்டாரால் நியமிக்கப்பட்டவர்கள் | 41 |
| பர்மா .... .... | 4 | | |
| | | ஆக மொத்தம் .... | 144 |

இவ்விரு சபைகளும் முற்கூறிய பிரகாரம் இந்தியாமுழுமையுமுள்ள அரசியல் சம்மந்தமான காரியங்களை கவனித்து வருவதற்காக ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன. ஷை சபைகளுக்கு தெரிந்தெடுத்தனுப்பிய நமது பிரதிநிதிகள், கடந்த மூன்றுவருடங்களில் தாங்கள் செய்த நன்மைகளை பகிரங்கப்படுத்தித்தெரிந்தெடுத்தனுப்பிய பொது ஜனங்களுக்கு சந்தோஷ முண்டாகும்படி செய்யக் கடமைப் பட்டிருக்கிறார்கள்.

## மாகாண கவர்ண்மெண்டுகள்.

ஒவ்வொரு மாகாணத்திலும் உள்ள சட்டசபைகளில் கவர்ண்மெண்டாரால் நியமிக்கப்பட வேண்டிய மெம்பர்களும் 10 ரூபாய் தீர்வை செலுத்தும் குடிஜனங்கள் தெரிந்தெடுத்தனுப்ப

வேண்டிய மெம்பர்களும் இக்கணயென்று கணக்கிடப்பட்டிருக் கின்றனர். இவ்விதமாய் ஒவ்வொரு மாகாண சட்டசபைகளிலும் பொதுஜனங்களால் தெரிந்தெடுத்தனுப்பிய மெம்பர்களிலிருந்து, மூன்றுகனவான்களை கவர்ன்மெண்டார் மந்திரிகளாக நியமித்து, அவர்கள்வசம், அரசியல் நிர்வாகங்களில் பணத்தட்டினால் பீடிக் கப்பட்டிருக்கும் சில இலாகாக்களை, மேற்பார்த்து வரும்படி ஒப்புவித்திருக்கின்றனர். ஆகவே இந்த சபைகளினால் நமக்கு விசேஷ நன்மைகளுண்டாகக் கூடுமென்று எதிர்பார்க்கமுடியாம லிருந்து வருகின்றது; இயற்கையாகவே பொது ஜனங்களுக்கு நன்மைசெய்யப் போதியபணமில்லாமல், ஒருவிதத்திலும் நன் மை செய்யமுடியாமலிருக்கும் நிலைமையில், நம்முடைய பிரதி நிதிகளாகிய மந்திரிகள, தங்கள் வசம் ஒப்புவிக்கப் பட்டிருக்கும் இலாகாக்களிலிருந்து, அனுவசியமாக செலவு செய்யப்பட்டுவரும் செலவினங்களைக் குறைத்து, சாதாரண ஜனங்களுக்குப்பாதகமில் லாதமாற்கங்களில் வரும்படியை அதிகப்படுத்தி ஜனங்களுக்கு நன்மையுண்டாகக்கூடிய மாற்கங்களில், செலவுசெய்யும்படி செ ய்து, தங்கள் கௌரவத்தை அதிகப்படுத்திக் கொள்வதற்குப் பிரயத்தினப்படவேண்டும். அப்படிசெய்வதறகுறிய சாதனங்கள் ஏராளமாகவிருக்கின்றன. ஆனால் கௌரவத்தையும், சுயநன்மை யையும் கருதிச்செல்லும் மந்திரிகளால், அவ்வித சாதனங்களைத் தெரிந்து கொள்ளவே முடியாது.

மேலும் தற்காலத்தில் அச்சபைகளிலுள்ள மெம்பர்களிற் பெரும்பாலார், தங்கள் கடமைகளை இன்னதென உணராமலிருப் பதுடன், தங்களைத் தெரிந்தெடுத்தனுப்பிய பொதுஜனங்களின் எண்ணத்திற்கு முற்றிலும் மாறுதலாக நடந்து வருகின்றனர்.

இதற்குமுன் இயற்கையாயடைந்துவந்த சாதனங்களையும் இப்போது பொது ஜனங்களடைய மாற்கமில்லாமல், (நமக்குப் பிரதிநிதிகளெனப் பெயர் வகித்தவர்களிற் சில கனவான்கள்) இடையூறு செய்து வருகின்றனர். தற்கால ஜனப்பிரதிநிதிகளிற் சில கனவான்கள்தங்கள் சொந்தக்காரியங்களை இச்சந்தர்ப்பத்திற் சீர்திருத்தியமைத்துக் கொள்ளவேண்டுமென்று கருதிப், பெரி தும் முயன்று வருகின்றனர்.

மேற்கண்ட சபைகளினால் நமக்கு விசேஷ நன்மையுண்டாகாவிட்டாலும், கெடுதல் நேராமலிருக்க வேண்டுமானால், தேச ஜனங்கள் ஒவ்வொருவருக்கும் அரசியல் ஞானம் உண்டாகும்படி, உண்மையான ஜனப்பிரதிநிதிகளும் தேசாபிமானிகளும் செய்யவேண்டும். தற்காலத்தில் பொது ஜனங்களுக்குள்ள பிரதிநிதிகளைத் தெரிந்தெடுக்கும் உரிமைகளை சரியான வழிகளில் உபயோகிக்கும்படி அவர்களுக்குத் தெரிவித்து, அதை அவர்கள் பின்பற்றி நடக்கும்படி அடிக்கடி ஞாபகப் படுத்தவேண்டும். ஒரு தேசமோ அல்லது ஒரு மாகாணமோ, நல்லநிலைமையிலிருக்க வேண்டுமானால், பொதுஜனங்களின் நன்மைக்காக ஏற்படுத்தப் பட்டிருக்கும் சபைகளிலுள்ள மெம்பர்கள் சாமர்த்தியமுள்ளவர்களாயிருப்பதுடன், சுயநலம் கருதாதவர்களாகவுமிருக்கவேண்டும். அப்படிப்பட்டவர்கள் அந்த ஸ்தானத்தில் இருக்கவேண்டுமானால், அவர்களை தெரிந்தெடுத்தனுப்புவதற்கு பாத்தியமுள்ள வாக்காளர்கள் (ஓட்டர்கள்) ஒவ்வொருவரும், தங்கள் உரிமைகளைச் சரியானவழிகளில் உபயோகிக்கவேண்டும்; அப்படிச்செய்யாமல் நமக்கு நாமே கெடுதிசெய்துகொண்டு இடையூறு வந்த சமயத்தில் அவர்கள் மீது குறை கூறுவது ஒரு விதத்திலும் புத்திசாலித்தனம் ஆகமாட்டாதென்று தங்களுக்கு சொல்லுவதுடன் " அறிவிலார் தாந்தம்மைப்பீழிக்கும் பீழை செறுவார்க்குஞ்செய்தலறிது " என்ற திருக்குறளின் வாக்கியத்தையும் இங்கு குறிப்பிடுகிறேன்.

## சென்னை மாகாண சட்ட நிருபண சபையின் அமைப்பு

இம்மாகாண சட்டசபையில் மொத்தம் 127 மெம்பர்கள் இருக்கிறார்கள். அவர்களில், கவர்ண்மெண்டாரால் நியமிக்கப் படவேண்டியவர்கள் 29 மெம்பர்கள், அவர்களில் சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் 19 பேருக்குமேற்படாமலும் மற்றவர்கள் சர்க்கார் உத்தியோகமில்லாதவர்களாயிருப்பதுடன் பஞ்சமர்களுக்காக 5ம், பின்னடைந்த மற்றவர்களுக்காக 1ம், குறிப்பிட்டுநியமிக்கப் படுவார்கள். அதுபோக 98 ஸ்தானங்களில், மகம்மதியர்களுக்

காக13, நாட்டுக்கோட்டை நகரத்தார்களுக்காக 1, இந்தியகிருஸ்தவர்களுக்காக 5, ஜமீன்தார்களுக்காக 6, சர்வகலாசாலைகளுக்காக1, அங்கிலோஇந்தியர்களுக்காக1, ஐரோப்பியர்களுக்காக 1, வியாபாரிகள், தொழிலாளர்களுக்காக 4, தோட்ட சங்கங்களுக்காக 1, ஆக 33 ஸ்தானங்கள் பிரத்தியேகப் படுத்தப்பட்டிருக்கின்றன. பாக்கி 65 ஸ்தானங்கள் மஹம்மதியர்களல்லாத பொதுவுக்காக வென்று குறிப்பிடப்பட்டிருக்கிறன்றன.

ஆனல் ஷை 65 ஸ்தானங்களில் 6 நகரங்களுக்காக மட்டும் ஒதுக்கிவைக்கப்பட்ட 9 ஸ்தானங்களுக்கு நகரத்தொகுதியென்றும் பாக்கியிருக்கும் 56 ஸ்தானங்களுக்கு கிராமத்தொகுதியென்றும், பெயர். இவ்விருதொகுதிகளிலும் 28 ஸ்தானங்கள் பிராமணரல்லாதாருக்குக்காகப் பிரத்தியேகப்படுத்தப் பட்டிருக்கின்றன.

கிராமாந்திரங்களில் வசித்துவரும் ஜனங்களின் சுதந்தரங்களில், நகரவாசிகளும், பிரத்தியேகஸ்தானங்கள் கிடைக்கப்பட்ட வியாபாரிகளும் தொழிலாளர்களும் மற்ற இதரவகுப்பினர்களும் பிரவேசிக்கலாமென்றும், கிராமாந்திரங்களில் வசிப்பவர்களுக்கு மற்றஸ்தானங்களில் பிரவேசிக்கமார்க்க மில்லாமலும் விதிகளை ஏற்படுத்தியிருக் கிறார்கள். இன்னும் இவ்விதமாய் பகுக்கப்பட்டிருப்பதைச் சற்றுஊன்றி ஆலோசித்து பார்ப்போமானல், நம்முடைய பணச்செலவினல் படித்துப்பட்டம் பெற்ற மேதாவிகள், நம்மிடம் வைத்துள்ள விசுவாசத்தை வெளிப்படையாகத் தெரிந்துகொள்ளலாம்.

# சென்னை சட்ட நிருபண சபையின் அமைப்பு

- சென்னை சட்ட நிருபண சபை மெம்பர்கள் 127.
  - கவர்ன்மெண்டாரால் நியமிக்கப்பட வேண்டிய மெம்பர்கள் 29.
    - உத்தியோகஸ்தர்கள் 19
    - உத்தியோகப்பற்றில்லாதவர்கள். 10
      - பஞ்சமர் 5
      - பின்னடைந்த வகுப்பார் 1
      - எலக்ஷனில் வரமுடியாத வகுப்பினர் 4
  - தெரிந்தெடுக்கப்பட வேண்டிய மெம்பர்கள் 98.
    - அடியிற்கண்ட வகுப்பினர்களால் தெரிந்தெடுக்கப்பட வேண்டிய மெம்பர்கள் 33.
      - மகம்மதியர்கள் 13
      - நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் 1
      - இந்தியகிறிஸ்தவர் 5
      - ஜமீந்தார்கள் 6
      - சர்வகலாசாலை 1
      - ஆங்கிலோ இந்தியர் 1
      - ஐரோப்பியர் 1
      - வியாபாரிகள் தொழிலாளர்கள் ... 4
      - தோட்டசங்கங்கள் 1
    - மகம்மதியர்களல்லாத பொதுவுக்காக 65.
      - நகரத் தொகுதி 9 (பிராமணரல்லாதவர் 3)
      - கிராமத் தொகுதி 56 பிராமணரல்லாதவர் 25.

428 லக்ஷம் ஜனத்தொகையுள்ள இம்மாகாணத்தில் 10,03,932 ஜனத்தொகையுள்ள, சென்னை, மதுரை, திருச்சி, காக்கிநாடா, விசாகபட்டணம், திருநெல்வேலியாகிய 6 நகரங்களுக்கு மட்டும் 9ஸ்தானங்களை எதற்காக வேறுபடுத்த வேண்டுமென்பதைத் தெரிந்து கொள்ள நம்மால் முடியவில்லை! அந்த ஆறு நகரங்களிலிருந்து தங்களுக்கென்று ஒதுக்கிவைக்கப்பட்ட ஸ்தானங்கள் தவிர, வேறு எத்தனை ஸ்தானங்களுக்கு அபேக்ஷகராக முன்வந்தார்கள், அவர்களில் எத்தனைபேர் மெம்பர்களாக வந்திருக்கிறார்களென்பதை நாம் தெரிந்து கொள்ள வேண்டும். மொத்த ஸ்தானங்களில் பெரும்பாகத்தை, நகரங்களில் வசிப்பவர்களே கைக்கொள்ளும்படியான மார்க்கத்தையும் ஏற்படுத்தி, நகரங்களுக்காக பிரத்தியேகஸ்தானங்களையும் ஒதுக்கிவைத்தது, எவ்விதமான நடு நிலைமையைக் குறிப்பிடுகிறதென்று நமக்குத் தெரியவில்லை!! 37 ஸ்தானங்களில் மட்டும் பிராமணர்களுக்கு மற்றவர்களுடன் சம உரிமையுண்டென்றும் மற்ற ஸ்தானங்களில் பிரவேசிக்க அவர்களுக்கு உரிமை இல்லையென்றும், விவாதம் செய்து தீர்மானிக்கும்படி செய்த நம்முடைய பிரதிநிதிகள் இத்தனை ஸ்தானங்களுக்கதிகமாக நகரவாசிகள் விரும்பக்கூடாதென்று தீர்மானிக்க வேண்டுமென்றும் விவாதித்திருக்கலாம், அல்லது நகரங்களுக்காகப் பிரத்தியேகமாக ஒதுக்கிவைக்காமலிருக்கும்படி செய்திருக்கலாம். இதுவுமல்லாமல் முன்னேற்றம் அடைந்திருக்கும் சில வகுப்பினர்களுக்குப் பிரத்தியேகஸ்தானங்களை, ஒதுக்கிவைத்த இந்நியாயாதிபதிகள், தமிழ்தேசத்திற்குவந்து கல்வியிற் பின்னடைந்தும், பொருளாதாரத்திற் குறைந்தும் கடனாளிகளாயிருந்து கஷ்டத்துடன் பெரும்பாலும் விவசாயத்தொழில் செய்துவரும், ஆந்திரர்களுக்கு சில ஸ்தானங்களை ஒதுக்கி வைக்காமலிருந்ததற்கு என்ன சமாதானம் சொல்லுவார்களென்று நமக்குத்தெரியவில்லை. இவ்விதமாய்க்கிரமமில்லாத முறையில், இம்மாகாணத்தில் மேலே குறிப்பிட்டபிரகாரம் பகுக்கப்பட்டிருக்கும் விவரங்களை கிராம வாசிகளாகிய நீங்கள் நிதானத்துடன் ஊன்றி ஆலோசித்து பார்ப்பீர்களானால்,

கிராமாந்திரங்களில் வசித்து வரும் சாதாரண ஜனங்களின் குறைகளை நம்முடைய பிரதிநிதிகள் எவ்வளவு தூரம் கவனித்து வந்தார்கள் என்பதை நீங்கள் தெரிந்துகொள்ளலாம், மேலும் இது வரையில் நடந்து வந்த அநுபவத்தாலும் கிராம வாசிகளுக்குள்ள லாப நஷ்டங்களையும் நீங்கள் தெரிந்துகொள்ளாமலிருக்க முடியாது.

கிராமாந்தரங்களில், கல்வி, விவசாயம், கைத்தொழில் முதலியன அபிவிருத்தி சம்மந்தமாக செலவு செய்வதற்கும் குள மராமத்துக்கள் நூதன கால்வாய்கள், அணைக்கட்டுகள் முதலிய முக்கிய வேலைகளுக்காகச் செலவு செய்வதற்கும் போதிய பணமில்லாத நம் கவர்ன்மெண்டானது மத்திய கவர்ன்மெண்டுக்கு 350 லக்ஷம் ரூபாய் உதவித்தொகை தாராளமாகக் கொடுத்து வருகின்றது. மேலும் போலீஸ் இலாகாவுக்கும் இன்னும் சில உபயோகமில்லாத இலாகாக்களுக்கும் அளவுக்கதிகமாகச் செலவு செய்யப்பட்டு வருகிறது. நம் மாஹாணத்திலுள்ள பாரஸ்டின் விஸ்தீரணம் சுமார் 130 லக்ஷம் ஏக்கர் ஆகும். அதைச்சரியான முறையில் பரிபாலித்தால் செலவுபோக ரூ 50 லக்ஷம் வரை நிகரலாபம் கிடைக்குமென ஊகிக்கப்படுகிறது. அப்படியிருக்க பாரஸ்டு காடுகளின் வருமானத்தைவிட அவ்விலாகாவுக்காகச் செலவழிக்கப்படும் தொகை ரூ 37000 அதிகமெனக் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் இன்னும் இவை போன்ற அநேகபாபத்துகள் இல்லாமல் இருக்கவில்லை.

## மெம்பர்கள் என்னசெய்ய வேண்டும்.

இம்மாகாணத்தின் வரவு, செலவு, அயிட்டங்களில், மந்திரிகள் வசம் ஒப்பிவிக்கப்பட்ட இலாகாக்களிலும், ஒப்பிவிக்கப்படாத இலாகாக்களிலும், அனுவசியமான செலவினங்களைக் குறைத்து, கவனக்குறைவால் குறைந்து போகக்கூடிய வருமானங்களை அதிகப்படுத்தி, பொதுஜன நன்மைக்காக செலவு செய்யவேண்டிய பாவத்துகளில், சிக்கனமாகவும், நாணயமாகவும், செல்வு செய்யும்படி ஆலோசனைகூறி தீர்மானங்களின் மூலமாக உறுதிப்படுத்தவேண்டும். இம்மாகாணத்தின் வரவு செலவைப்பற்றி சுருக்கமாக இதனடியிற் குறிப்பிடப்பட்டிருக்கிறது

## மாகாண கவர்ன்மெண்டுக்குட்பட்ட வரவு அயிட்டங்கள்.

| ரெவின்யூவருமான விபரம். | 1920—21 வருஷத்திய வருமானம் | 1921—22ம் வருஷத்திய வருமானம் | 1922—23ம் வருஷத்திய வருமானம் | 1923—24ம் வருஷத்திய வருமான மதிப்பு |
|---|---|---|---|---|
| நிலத்தீர்வை .... .... | 57849000 | 60748000 | 64330000 | 63437000 |
| லாகிரி வஸ்துக்களின் குத்தகை .... | 53907000 | 48817000 | 49046000 | 54335000 |
| ஸ்டாம்பு விற்பனை .... | 17810000 | 18985000 | 22200000 | 23945000 |
| பாரஸ்டு வருமானம் .... .... | 5269000 | 4857000 | 5372000 | 5052000 |
| ரிஜிஸ்டிரேஷன் வருமானம் .... | 3061000 | 3256000 | 3670000 | 3742000 |
| இரிகேஷன் வேலைசம்மந்தமாகசெலவு போக நிகரயிருப்பு .... | 8931000 | 9177000 | 9410000 | 9431000 |
| இதர அயிட்டங்களில் வரவு .... | 9156000 | 8389000 | 9488000 | 17117200 |
| ஆகமொத்தம் .... | 155983000 | 154229000 | 163516000 | 2459000 |

மாகாண கவர்ன்மெண்டின் மேற்பார்வையில் செய்யும் செலவு அயிட்டங்கள்.

| செலவு விபரம் | 1920—21 | 1921—22 | 1922—23 | 1923—24 |
|---|---|---|---|---|
| ரெவினியூ சம்மந்தமான செலவு ... | 18522000 | 12933000 | 13931000 | 14447000 |
| பொது அட்மினிஸ்டிரேஷன் ... | 2446000 | 13510000 | 13293000 | 13625000 |
| நீதிபரிபாலனம் ... | 11865000 | 9457000 | 9699000 | 9813000 |
| போலீஸ் சம்மந்தமான செலவு ... | 17697000 | 20040000 | 20581000 | 20403000 |
| படிப்பு சம்மந்தமான செலவு ... | 13300000 | 14324000 | 15770000 | 17208000 |
| சிவில் மரமத்துக்கள் ... | 11089000 | 12184000 | 11896000 | 11250000 |
| குளமராமத்துக்கள் சம்மந்தமான மேஜர் வேலைகள் தவிர செலவு ... | 6931000 | 7860000 | 7415000 | 7913000 |
| வைத்தியம் சுகாதாரம் விஷயமாகச்செலவு ... | 6788000 | 8532000 | 7654000 | 8081000 |
| பாரஸ்டு விஷயமாகச் செலவு ... | 4531000 | 5229000 | 496[illegible]000 | 5089000 |
| அலவென்ஸ், பென்ஷன்முதலிய செலவு | 3801000 | 4583000 | 4889000 | 5235000 |
| விவசாயம் கைத்தொழில் ... | 3639000 | 4623000 | 4820000 | 5187000 |
| ஜெயில்கள் விஷயமாகச்செலவு ... | 2801000 | 2956000 | 3995000 | 3721000 |
| லாகிரி சம்மந்தமான இலாகாச்செலவு ... | 2663000 | 3089000 | 2990000 | 3196000 |
| ஸ்டேஷனரி, பிரிண்டிங் செலவு ... | 2424000 | 2469000 | 24060000 | 2716000 |
| ரிஜிஸ்டிரேஷன் செலவு ... | 2097000 | 2261000 | 2207000 | 2364000 |
| இதரபாபத்துக்களுக்குக்காகச்செலவு | 2416000 | 5251000 | 3969000 | 6134000 |
| மத்தியகவர்ண்மெண்டுக்கு கொடுக்கும் உதவித்தொகை ... | 34800000 | 34800000 | 34800000 | 34800000 |
| ஆக மொத்தம் ... | 147810000 | 164101000 | 165284000 | 171172000 |
| வரவுக்கதிகம் செலவானது ... | | 9872000 | 1768000 | 2459000 |

## மெம்பர்களும் பொதுஜனங்களும்

இச்சபையில் உள்ள மெம்பர்கள் இம்மாகாணத்திலுள்ள முனிசிபாலிடிகள், அதன் பிரதிநிதிகளால் சரியாய் பரிபாலிக்கப் பட்டுவருகின்றனவா? ஒவ்வொருஜில்லா போர்டின் மேற்பார்வையிலுள்ள தாலூகா போர்டுகள் பாரபக்ஷமின்றி நடத்தப்பட்டுவருகின்றனவா? ஒவ்வொருதாலூகாபோர்டின்கீழ்ப்பட்டிருக்கும்யூனியன்போர்டுகள் அதன் நிர்வாகத்தைச் சரியாய் நடத்திவருகின்றனவா? ஒவ்வொரு தாலூகாபோர்டும் அதன் பரிபாலனத்திலுள்ள கிராமங்களை நல்லநிலமையில் வைத்திருக்கின்றனவா? என்பதைப்பற்றி கவனித்துவருவதுடன் அதுவிஷயத்தில்செய்ய வேண்டிய சீர்திருத்தங்களையும் நூதனமாக ஏற்படுத்தவேண்டிய விதிகளையும் ஏற்படுத்தும்படி செய்யவேண்டும். முனிஸிபாலிடிகளின் எல்லைக்குள்ளும் லோக்கல் போர்டுகளின் எல்லைக்குள்ளும் சுகாதாரம், ஆஸ்பத்திரிகள், பள்ளிக்கூடங்கள், முதலிய பாபத்துக்களுக்காக மாகாணகவர்ண்மெண்டார் செலவு செய்யும்பணத்தை ஜனதொகையின்பேரிலும்விஸ்தீரணத்தின் பேரிலும் ஈவித்து, ஒவ்வொரு முனிசிபாலிடிக்கும், தாலூகா போர்டுகளுக்கும், யூனியன்போர்டுகளுக்கும் பாரபக்ஷமின்றிக் கொடுக்கும்படி செய்யவேண்டும். இது விஷயமாக வெளியிடப்படும் கவர்ன்மெண்டு அட்மினிஸ்டிரேஷன் ரிப்போர்ட்டில், தனித்தனியாக முனிஸிபாலிடிகள் தாலூகாபோர்டுகள், யூனியன் போர்டுகள் இவைகளின் ஜனத்தொகை, அவைகளின் வரும்படி, ஒவ்வொன்றுக்கும், கவர்ண்மெண்டிலிருந்து கொடுக்கும் கிராண்டு முதலிய வருமான விவரங்களும், அயிட்டவாரியாகச் செலவுசெய்யும் செலவு விவரங்களும், தெளிவாகத்தெரியும்படி தயார்செய்விக்கவேண்டும். தொழிலபிவிர்த்திக்காக ஐக்கியநாணயச்சங்கங்களாற் கொடுக்கும் கடன்கள், ரெவின்யூ இலாகா மூலமாகக்கொடுக்கும், நிலச்சீர்திருத்தக்கடன், விவசாயச்செலவுக் கடன், முதலிய ஒத்தாசைகளுக்காக ஒவ்வொரு வருஷத்திலும் எவ்வளவு பணத்தை மாகாணகவர்ண்மெண்டார் செலவு செய்து

வருகிறார்களென்பதையும், அதன் பிரயோஜனத்தைச்சாதாரண ஜனங்கள் பாரபக்ஷமின்றி அடைவதற்கு நம்முடைய பிரதிநிதிகள் எவ்வளவுதூரம் பிரயாசை எடுத்து வந்திருக்கிறார்களென்பதையும் நாம் தெரிந்துகொள்ளவேண்டும். தற்காலத்துள்ள பொதுஜன சபைகளின் அமைப்பானது, கிராமாந்திரங்களில் வசிக்கும் ஜனங்களுக்கும் பிரதான நகரங்களிலும் நடுத்தர நகரங்களிலும் வசித்துவரும் ஜனங்களுக்கும், பாரபக்ஷமின்றியிருக்கவில்லை என்று தைரியமாகக்கூறலாம். 1921-ம் வருஷத்திய ஜனத்தொகைக்கணக்குப்படி 14-ல் 13 பங்கு ஜனங்களுக்கதிகமாக கிராமங்களிலும், யூனியன் நகரங்களிலும் வசித்துவருகின்றனர். கல்வி, சுகாதாரம், ஆஸ்பத்திரிகள், ரோட்டுவசதிகள் முதலிய பாபத்துகள் சம்மந்தமாக கிராமவாசிகளைப்பற்றி கவர்ன்மெண்டாவது பொதுஜனசபைகளாவது கிஞ்சிற்றும் கவனிக்கவில்லை யென்று குறைகூறுவதை அவர்கள் மறுக்கமுடியாது.

## நாம் இப்பொழுது என்னசெய்யவேண்டும்

பொதுஜன சபைகளைப்பற்றியும், அதினின்று கிராமவிவசாயிகளடையவேண்டிய பிரயோஜனங்களையும், அதையடைதற்குறிய மார்க்கங்களையும், கிராமவிவசாயிகளின் குறைகளையும் தேசத்தின் தற்கால நிலைமையையும், அரசியல் சம்மந்தமான குழப்பங்களையும், சற்றுதெரிந்துகொள்ளவேண்டும். மேலும் நமக்குக்கெடுதல் உண்டாகாமற்செய்துகொள்ளவேண்டுமென்றாலும் தற்கால அரசியல் சம்மந்தமான சீர்திருத்தங்களையும் பொதுஜனசபைகளின் மூலமாக நடைபெற்றுவரும் நிர்வாக சம்மந்தமான விதிகளையும், கிராமவாசிகள் கட்டாயம் தெரிந்துகொள்ளவேண்டும்.

இம்மாகாணத்தில் 100க்கு 79பேர் விவசாயிகளென்பதையும், அதில் சற்றேறக்குறைய 70பேர்கள்வரை கிராமாந்திர விவசாயிகளென்பதையும் தெரிந்துகொள்ளவேண்டும்.

விவசாயிகளாகிய இவர்களின் க்ஷேமமே, ராஜாங்கப் பெருமைகளில், முதன்மைபெற்ற தேசத்தின் க்ஷேமமென்றும் தேசத்தின் க்ஷேமத்தைவிரும்புவதே உண்மையான ஜனப்பிரதிநிதிகளின் கடமையென்றும், அப்படிப்பட்ட பிரதிநிதிகளைத் தெரிந்தெடுத்தலேபொதுஜனங்களின்கடமையென்றும்உணர்ந்து உண்மையான ஜனப்பிரதிநிதிகளை தெரிந்தெடுக்கும்படி செய்ய கிராமவாசிகளில் முக்கியமானவர்கள் ஒவ்வொருவரும் கடமைப் பட்டிருக்கிறார்கள். மேலும் அவ்விதம் தெரிந்தெடுக்கும் பிரதிநிதிகள் மூலமாக ஒவ்வொரு கிராமத்திலும், ஒற்றுமையை உண்டுபண்ணுவதற்குப் பிரயத்தனப்படவேண்டும். வீண் வியவகாரங்களை யொழிக்கும்படி செய்யவேண்டும். கட்குடித்தல், டம்பச்செலவு செய்தல் முதலிய கெட்டவழக்கங்களை அறவே யொழிக்கும்படி செய்யவேண்டும். விவசாயம், வியாபாரம், கைத்தொழில் முதலிய முக்கிய தொழில்கள் சம்மந்தமாகக் கூட்டுறவு முறைகளைக் கையாளும்படி செய்யவேண்டும். ஒவ்வொரு கிராமத்திலும் ஒவ்வொரு குடியானவனும் யாதாமொரு கூட்டுறவு சங்கத்தைச் சேர்ந்திருக்கும்படி செய்யவேண்டும்.

ஒவ்வொரு கிராமத்திலும் ஏழைக் குழந்தைகள் முதல் பணக்காரர் வீட்டுக்குழந்தைகள் வரை கட்டாயமாக ஆரம்பக் கல்வி கற்கும்படி செய்யவேண்டும். இவ்வித சௌகரியங்களை நம்முடைய கிராமங்களில் செய்துகொடுக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் நம்முடைய சங்கமானது முயற்சித்து வருகிற தென்பதை நம்மவர்களொவ்வொருவரும் அறிவார்கள். மேலும் பொது ஜன சபைகளிலும் நம்மவர்கள். அதிகமாகயிருந்து கிராம விவசாயிகளுக்கு வேண்டிய சாதனங்களைச்செய்து கொடுக்கவேண்டுமென்ற எண்ணத்துடன் (நம் சங்கமானது) முயற்சித்து வருவதையும், அவ்விதம் தாலூகா போர்டுகளிலும் ஜில்லா போர்டுகளிலும், சட்டசபைகளிலும் நம்முடையபிரதிநிதிகளை தெரிந்தெடுத்தனுப்பியிருப்பதையும், இன்னும் சந்தர்ப்பம்தெபோது அனுப்புவதற்குப் பிரயத்தினப்பட்டுக்கொண்டு வருவதையும், நம்மவர்கள் தெரிந்திருக்கிறார்கள்.

மறுபடியும் 31—10—23ல் நடைபெறப்போகும் சென்னை சட்டசபை எலெக்ஷன் சம்மந்தமாக ஆவணி 30வ வெள்ளியான கம்மநண்பன் பத்திரிகையில் வரைந்துள்ள ஓர் வியாசத்தையும் நீங்கள் ஒவ்வொருவரும் படித்துப் பார்க்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

## 31—10—23ல் நடைபெறும்.

### சட்ட சபை எலெக்ஷன் சம்மந்தமாக நாம் என்னசெய்யவேண்டும்.

நம்முடைய சங்கத்தின் நோக்கப்படி நமக்குப் பிரதிநிதியைத் தெரிந்தெடுப்பதில், நம்மவர்களொவ்வொருவரும் சிரத்தையுடன் நடந்துகொள்ள வேண்டுமென்று இதனடியில் வரையப்பட்டிருக்கிற பிரகாரம் சங்கத்தின் பிரசுரத்தின் மூலமாக வெளியிட்டிருப்பதை கவனித்து நம்முடைய சங்கத்திற்கு பெருமையுண்டாகும் வண்ணம், நம்மவர்களொவ்வொருவரும் வேண்டிய பிரயாசையெடுத்து திருநெல்வேலி ஜில்லாவின் கிராமாந்தர விவசாயிகளுக்குப் பிரதிநிதியாக ஸ்ரீமான் குருவிகுளம் ஜமீன்தார் P. N. கொண்டல் ராயசாமிநாயுடவர்களை சென்னை சட்டசபையில் ஸ்தானம் வகிக்கும்படி செய்யவேண்டும். அவ்விதம் செய்வீர்களென்று நம்பியிருக்கும்.

தங்கள் ஊழியன்.

கி. அழகிரிசாமி.

**தெக்ஷண கம்ம மஹாஜன அபிவிர்த்தி சங்கம்**

**கோவில்பட்டி. 28—7—1923.**

**கம்மகனவான்களே !**

**இதர விவசாய நண்பர்களே !**

சமீபத்தில் நடைபெறும் சென்னை சட்டசபை எலெக்ஷனில், ஒவ்வொரு வகுப்பினரும், ஒவ்வொருதொழிலாளர்களும், தங்கள் பிரதிநிதிகளைத் தெரிந்தெடுத்து, சட்டசபைக்கனுப்புவதற்குத்தீவிரமாய் முயற்சித்து வருகின்றனரொன்பதையும்,

து போலவே விவசாயிகளாகிய நாமும், நமக்காகப் பிரதிநிதிகளைத் தெரிந்தெடுத்தனுப்பவேண்டியதவசியமென்பதையும், தாங்கள் தெரிந்திருந்தபோதிலும், ஞாபகப்படுத்துவது மிகையாகாது.

ஒவ்வொரு வகுப்பினரும், தொழிலாளர்களும், கூடுமானவரை தங்கள் தேச நன்மையை விரும்பும் கனவான்களையே, தங்கள் பிரதிநிதிகளாகத் தெரிந்தெடுத்தனுப்பக் கடமைப்பட்டிருப்பது போலவே, விவசாயத்தொழில் செய்பவர்களாகிய நாமும் நமது தேச நன்மையைக்கூடுமான வரைகருதக் கூடிய பிரதிநிதிகளைப்பார்த்துத் தெரிந்தெடுத்தனுப்பக்கடமைப் பட்டிருக்கிறோம்.

இவ்விதமாய் நாம் தெரிந்தெடுக்கும் பிரதிநிதிகளால், நமக்கு நன்மையுண்டாக வேண்டுமென்று விரும்பும் பக்ஷத்தில் அவர்கள் (நாம் தெரிந்தெடுக்கும் பிரதிநிதிகள்) கிராமாந்தரங்களில் வசித்துவரும் பெரும்பான்மையான ஜனங்களுடன் பழகி, அவர்கள் குறைகளையும், தேவைகளையும் நேரில் தெரிந்தவர்களாக இருக்கவேண்டுமென்று, தங்களுக்கு ஞாபகப்படுத்துவதுடன், இவ்வித பொருத்தமுடைய ஸ்ரீமான் குருவிளம் ஜமீந்தார் **P. M. கோண்டல்ராயசாமி நாயுடு** அவர்களையே, நமக்குப் பிரதிநிதியாகத் தெரிந்தெடுக்கவேண்டுமென்றும், அவர்களுக்கே நம்முடைய ஓட்டுகளைக் கொடுக்கவேண்டுமென்றும் சங்கத்தின் சார்பாகவும், விவசாயத்தொழிலின் சார்பாகவும், தங்களைக் கேட்டுக்கொள்கிறோம்.

கனவான்களே!

நாங்கள் குறிப்பிடும் ஸ்ரீமான் ஜமீந்தாரவர்கள் நம்முடைய சங்கத்தின் செக்ரொட்டேரி (காரியதரிசி) யாகயிருந்து, 1919-ம் வரு முதல் நம்மவர்களுடன் நெருங்கிப்பழகி வருவதுடன், கோவில்பட்டியில் இரண்டு மகாநாடுகளையும், தங்கள் சிரமத்தை எதிர்பாராமல் கிராமங்கள் தோறும் சென்று, பல மீட்டிங்குகளையும் கூட்டிவைத்து, நம்மவர்கள் முன்னேற்றத்திற்காகப் பிரயாசை எடுத்துப் பாடுபட்டு வருவதை, நம்மவர்கள் ஒவ்வொருவரும் அறிவார்கள்.

மேலும் சுமார் இருபது வருடங்களுக்கு மேலாகவே லோக்கல் போர்டுகளில் மெம்பராகவும், வைஸ் பிரசிடெண்டா கவும் பின்னர் பிரஸிடெண்டாகவுமிருந்து வருவதால், கிரா மாந்திர ஜனங்களின் குறைகளையும், தேவைகளையும், நன் ருய்த்தெரிந்திருக்கிறார்கள்.

ஆகையால் நம்முடைய குறைகளையும், தேவைகளையும் கவனிப்பதற்காக, மேற்கூறிய குருவிகுளம் ஜமீந்தார் ஸ்ரீமான் **P. N. கோண்டல்ராயசாமி நாயுடு** அவர்களையே, திருநெல் வேலி ஜில்லாவின் பிரதிநிதியாகத் தெரிந்தெடுத்தனுப்புவதற்கு நம்மவர்களெல்லாவொருவரும் தகுந்த பிரயாசை எடுத்துக்கொ ள்வதுடன் நம்முடைய இதர விவசாய சகோதரர்களிடமும் தெரிவித்து அவர்கள் ஓட்டுகளையும் நம்முடன் சேர்ந்து அவர்களு க்கே கொடுக்கும்படி செய்யவேண்டுமென்று, மீண்டும் தங் களைக் கேட்டுக்கொள்கிறோம்.

**அக்கா நாயுடு,**
சுப்பிரமணியபுரம்.

**சுப்பா நாயுடு,**
மாவில்பட்டி.

**எல்லப்ப நாயுடு,**
எப்போதும்வென்ரான்.

**சென்னகேசவ நாயுடு,**
நாரணபுரம்.

சாமிநாயுடு என்ற
**குருவப்ப நாயுடு,**
கொல்லங்கிணர்.

**V. S சுப்பா நாயுடு,**
வெள்ளையம்மாள்புரம்.

**கொ. எ. சுப்பா நாயுடு,**
கொடுக்காம்பாறை.

**நாராயணசாமி நாயுடு,**
தேவர்குளம்.

**கி. அழகிரிசாமிநாயுடு,**
கிருஷ்ணபுரம்.

# ஓட்டர் ஜாப்தாவும் கிராம விவசாயிகளும்.

ஆங்கில அரசாட்சியில், பலவருடங்களுக்குப் பின்னர் பொது ஜனசபைகளுக்கனுப்ப வேண்டிய பிரதிநிதிகளைத் தெரிந்தெடுக்கும் உரிமை பெரும்பாலும் விவசாயிகளுக்குக்கிடைக்கப் பெற்றிருக்கிறது ஆனால், விவசாயிகளில் அவ்வித சுதந்தரமுள்ள அனேக முக்கியஸ்தர்களின் பெயர்களை ஜாப்தாவில் சேர்க்கவில்லை. ஆகையால் ஜாப்தாவில் சேர்க்கப்பட வேண்டியவர்கள் இவ்வித யோக்கியதாம்சமுடையவர்களென்பதைப்பற்றி விவசாயிகள் தெரிந்துகொள்ளவும், தெரிந்து தங்கள் பெயரை ஜாப்தாவில் சேர்த்துக்கொள்ளும்படி செய்வதற்குத் தாங்கள் பிரயத்தினப்படவேண்டுமென்றும் தங்களுக்கு ஞாபகப்படுத்துவதற்காக இதனடியில் விவரித்துக் காட்டப்பட்டிருக்கிறது.

## பொதுஜன சபைகளின் ஓட்டர்களாகத் தெரிந்தெடுக்க லாயக்கில்லாதவர்கள்

1. பிரிட்டிஷ் குடிகளல்லாதவர்கள்
2. 21-வயதுக் குட்பட்டவர்கள்
3, புத்தி சுவாதீனமில்லாதவர்கள்
4. இந்தியன் பினல்கோட் செக்ஷன் 9 A யின் கீழ்குற்றம் செய்தவர்கள்

| | |
|---|---|
| கௌன்ஸ் ஆப்ஸ்டேட்ஸ்<br>அல்லது<br>(இராங்க சபை) டில்லி | இச்சபைக்கு ஓட்டுக் கொடுக்கலாயக்குள்ளவர்கள். |

## மகம்மதிய, மகம்மதியரல்லாதவர் தொகுதிகள்.

1. முந்தியவருஷத்தில், குறைந்தது 120, நாட்கள் தெரிந்தெடுத்தனுப்பும்ராஜதானியில் வசித்திருக்கவேண்டும்
2. அந்த ராஜதானிக்குள் அவருடைய சொத்தின் வருமானம் வருஷம் ஒன்றுக்கு ரூ 3000-க்குக் குறையாமல் வரவேண்டும்.

3. ராஜதானிக்குள் தண்ணீர்த்தீர்வையுள்பட 1500 ரூபாய் தீர்வை செலுத்தும் பட்டாதாராகவாவது இனும் தாராகவாவது இருக்கவேண்டும்.

4. கவர்ண்மெண்டிலிருந்து (மாலிக்கானு) ஜீவனும்ச அலவன்சாக வருஷத்தில் 3000 ரூபாய் பெறுபவராக இருக்கவேண்டும்.

5. 1918-ம் வருஷத்திய இந்தியன் இன்கம்டாக்ஸ் ஆக்ட் 13-வது செக்ஷன் படிக்கு முந்திய வருஷத்தில் குறைந்தது 2000) ரூபாய் வரவுக்காக வருமானவரி போடப்பட்டிருக்க வேண்டும்.

6. இந்திய சட்டசபை சேம்பரிலாவது அல்லது அந்த சட்டசபையிலாவது உத்தியோகப் பற்றில்லாத மெம்ராக இருந்திருக்கவாவது, அல்லது இருக்கவாவது வேண்டும்

இன்னும் உத்தியோகஸ்தரல்லாத

7 1. மதருஸ் முனிசிபல் சபையின் பிரசிடெண்டுகள்

2. ஜில்லாபோர்டுகளின் பிரசிடெண்டுகள்

3. தாலூகாபோர்டுகளின் பிரசிடெண்டுகள்

4. ஜில்லாபோர்டுகளின் வைஸ் பிரசிடெண்டுகள்

8. முனிசிபல் சபைகளின் (உத்தியோகஸ்தரல்லாத).

1. சேர்மென்கள்

2. வைஸ் சேர்மென்கள்

9 1. செனெட் சபையின் மெம்பர்கள்

2. சர்வகலாசாலையின் கௌரவ அங்கத்தினர்கள்.

10. 1912-ம் ஹு.த்திய கோவாப்ரேட்டிவ் சொசைட்டி ஆக்ட் 2-வது செக்ஷன்படி ரிஜிஸ்டர் செய்யப்பட்ட பாங்கின் யூனியனில், அல்லது பாங்கியில் (உத்தியோ

கஸ்தரல்லாத) பிரசிடெண்டாகவாவது வைஸ்பிரசிடெண்டாகவாவது இருப்பவர்கள்

11. மஹோ மஹோபாத்தியாய அல்லது சாம்ஸ் அல்உலாமா என்னும்பட்டம் பெற்றவர்களென்று சர்க்காரால் அங்கீகரிக்கப்பட்டவர்கள்.

12. மகம்மதியத்தொகுதிக்கு மகம்மதியர்களைத் தவிர மற்றவர்களை ஓட்டர்களாக ரிஜிஸ்டர் செய்யப்படமாட்டாது.

13. மகம்மதியரல்லாத தொகுதிக்கு மகம்மதியர்களை ஓட்டர்களாக ரிஜிஸ்டர் செய்யப்படமாட்டாது.

## இந்தியா சட்டசபை.

## Legislative Assembly.

I. சென்னை நகரத் தொகுதி (பொது)

ஓட்டுக் கொடுப்பவரின் யோக்கியதாம்சங்கள்:—
கீழ்க்கண்ட ஒன்று அல்லது பலவரிகளில் ரூ. 20 செலுத்துபவர்கள்:— சொத்தின்வரி; கம்பனிகளுக்குப்போடப் பட்டிருக்கும்வரி; தொழில்வரி; அல்லது வருமானவரி.

(குறிப்பு:— மகம்மதியர் அல்லது ஐரோப்பியர் ஓட்டர்களாகத் தெரிந்தெடுக்கப்பட மாட்டார்கள். மேலும் ஓட்டர்கள் ஷை சென்னை நகரத்தொகுதிக்குள் முந்திய வருஷத்தில் குறைந்தது 120 நாட்கள் வசித்திருக்கவேண்டும்)

II. கிராமத் தொகுதி (பொது),
யோக்யதாம்சங்கள்.

1. ரூபாய் 50 தீர்வை செலுத்துகிற ரயத்துவாரி பட்டாதார்கள் அல்லது இனும்தார்கள் அல்லது.

2. ஷை யார்களிடமிருந்து ரூபாய் 50 தீர்வையுள்ள நிலங்களை ரிஜிஸ்டர் செய்யப்பட்ட கட்டுக்குத்தகை நிலஸ்வான்கள் அல்லது.

3. மலபார்லாண்டு ரிஜிஸ்ட்ரேஷன் ஆக்டுப்படிக்கு புரோப் பரைட்டருடன் ஜாயிண்டாக ரூ 50 தீர்வை செலுத்தக்கூடிய நிலச்சொந்தக்காரரென்று ரிஜிஸ்டர் செய்யப்பட்டவர்கள் அல்லது,

4. ஒரு எஸ்டேட்டில் ரூ 50 தீர்வை செலுத்தக்கூடிய நிலச்சுவான்கள் அல்லது,

5. ரூபாய் ஐம்பது தீர்வை செலுத்தக்கூடிய நிலங்களைப் பயிரிடுகிறவர்கள் அல்லது குடியானவர்கள் அல்லது,

6. ஷை தொகுதிக் குட்பட்ட முனிசிபாலிடியில் முந்திய வருஷத்தில் கீழ்க்கண்ட ஒன்று அல்லது அதிகமான வரிகளில் ரூ 20 விதிக்கப்பட்டவர்கள். (சொத்துவரி; கம்பனிவரி: அல்லது தொழில்வரி) அல்லது

7. முந்திய வருஷத்தில் (இன்கம்டாக்ஸ்) வருமானவரி போடப்பட்டவர்கள்.

## நிலச்சுவான்கள் தொகுதி (ஸ்பெஷல்)

யோக்கியதாம்சம்:— மதராஸ் சட்டநிரூபண சபை நிலச்சுவான்களின் எந்தத்தொகுதியிலாவது எலக்டாராக ரிஜிஸ்டர் செய்யப்பட்டவர்கள்.

## இந்திய வியாபாரத் தொகுதி (ஸ்பெஷல்)

யோக்கியதாம்சம்:— ஒவ்வொரு இந்தியரும் முந்திய வருஷத்தில் குறைந்தது 120 நாட்கள் ராஜதானிக்குள் வசித்திருக்கவேண்டும். மேலும் ஒவ்வொரு இந்திய பங்காளிப்பிரதிநிதியும் தெரிந்தெடுக்கப் படுவார். அவர்கள் தங்களுக்குக்கிடைத்தவருமானத்தில் குறைந்தது ரூ. 10000–க்கு வருமான வரி விதிக்கப்பட்டவர்களாக இருக்கவேண்டும்.

## மதராஸ் சட்ட நிரூபண சபை.

தொகுதிகள் (பொது)

1. மகம்மதியரல்லாத தொகுதிக்கு ஐரோப்பியர் ஆங்கிலோ இந்தியர், இந்திய கிரிஸ்தவர் மகம்மதியர் இவர்கள் அல்லாதவர்கள் எலக்டர்களாகத் தெரிந்தெடுக்கப் படுவார்கள். அவர்கள்

ஷை தொகுதியில் முந்தியவருஷத்தில் குறைந்தது 120 நாட்கள் வசித்திருந்து கீழ்கண்ட யோக்யதாம்சங்களும் பெற்றிருக்க வேண்டும்.

2. நகரத்தொகுதிக்கு:— சொத்துவரி, கம்பனிவரி, தொழில்வரி, அல்லது வருமானவரி, இவைகள் விதிக்கப்பட்டவர்களாய் இருக்கவேண்டும். அல்லது மதராஸில் முந்திய வருஷத்தில் (குறைந்தது 6மாதத்திற்கு ரூ 60 வருஷ வருமானம் வரக்கூடிய ஒருவீட்டில் குடியிருந்திருக்கவேண்டும். அல்லது மதராஸ் அல்லாத மற்ற அர்பன் தொகுதிகளுக்கு ரூரல் தொகுதிகளில் எலக்டர்களுக்கு ஏற்பட்டுள்ள நிலச்சம்மந்தமான யோக்கியதாம்சங்களில் ஒன்று போதுமானது.

3. கிராமாந்தரத் தொகுதிகளுக்கு ரூபாய் 10 தீர்வை செலுத்தக்கூடிய ரயத்வாரிபட்டாதார்கள் அல்லது இனாம்தார்கள் அல்லது 1895 வருஷத்திய மலபார்லாண்டு ரிஜிஸ்ட்ரேஷன் ஆக்டுப்படிக்கு ரூ 10 செலுத்தக்கூடிய நிலத்தைவைத்திருப்பவரும் புரோப்ரைட்டருடன் ஜாயிண்டாக இருப்பவர்களும் அல்லது ரூபாய்பத்து செலுத்தக்கூடிய ரிஜிஸ்டர்செய்யப்பட்ட கட்டுக்குத்தகைதார்கள் அல்லது ரூ 10 செலுத்தக்கூடிய எஸ்டேட்டையுடைய நிலச்சுவான்கள் அல்லது ரூ 10 செலுத்தக் கூடிய நிலங்களையுடைய பயிரிடுங்குடிகள் அல்லது ஷை தொகுதியிலுள்ள முனிசிபாலிடியில் முந்திய வருஷத்தில் நிலத்தீர்வை கம்பனித்தீர்வை, தொழில்வரி இவைகளில் ரூ 3 விதிக்கப்பட்டவர்கள் அல்லது முந்திய வருஷத்தில் வருமான்வரி விதிக்கப்பட்டவர்களாகவாவது இருக்க வேண்டும்

மேற்கண்ட யோக்யதாம்சங்களைத்தவிர பென்ஷன் வாங்குகிற உத்தியோகஸ்தர்களும் தேவையில்லையென நீக்கப்பட்ட உத்தியோகஸ் தர்களும், மிலிட்டேரி உத்தியோகஸ்தர்களும் ஓட்டுக்கொடுக்கச் சுதந்தரமுள்ளவர்களாவார்கள்.

மகம்மதிய இந்திய கிரிஸ்தவ, ஐரோப்பிய ஆங்கில இந்தியத்தொகுதிகளுக்கு முறையேயுள்ள ஏலக்டர்கள் முந்திய வருஷத்தில் தத்தம்தொகுதிகளில் குறைந்தது 120 நாட்கள்

வசித்திருக்கவேண்டும். (ஐரோப்பிய ஆங்கில இந்திய தொகுதிகளுக்கு மதராஸ் ராஜதானியில் வசித்திருக்கவேண்டும்) மேலும் மகம்மதியரல்லாத ரூரல் அல்லது அர்பன்தொகுதிக் கேற்பட்டுள்ள யோக்யதாம்சங்களில் ஒன்று இருக்கவேண்டும்.

## நிலச்சுவான்களின் தொகுதிகள் (ஸ்பெஷல்)

**யோக்கியதாம்சங்கள்:—** இராஜதானிக்குள்ளிருக்கும் எஸ்டேட்டில் ரூ 3000 வருஷவருமானமுள்ள ஜமீன்தார்கள்; ரூ 1500 தீர்வை செலுத்தக்கூடிய நிலத்தையுடையவர்கள், மேலும் சர்க்காரிலிருந்து வருஷத்துக்குக் குறைந்தது ரூ 3000 ஜீவனும்ச அலவன்ஸ் வாங்குகிறவர்கள் முந்திய வருஷத்தில் குறைந்தது 120 நாட்கள் ஷை தொகுதியில் வசித்திருந்தால் ஓட்டுக்கொடுக்கச் சுதந்தரமுடையவர்களாவார்கள்.

## மதராஸ் சர்வகசாலைத் தொகுதி (ஸ்பெஷல்)

இந்தியாவில் குடியிருப்புடையவர்களும் அல்லது செனட்டில் மெம்பர்களாயுள்ளவர்களும் அல்லது சர்வகலாசாலையின் கௌரவ அங்கத்தினர்களும் அல்லது சர்வகலசாலையில் பட்டம் பெற்ற 7 வருஷ அனுபோகமுள்ளவர்களும் ஷை தொகுதிக்கு ஓட்டுக்கொடுக்கச் சுதந்தரமுடையவர்களாவார்கள்.

## தோட்டக்காரரின் தொகுதி (ஸ்பெஷல்)

தென்னிந்தியா ஐக்கியதோட்டக்காரரின் சங்கத்தைச் சேர்ந்த சங்கங்களில் மெம்பராயுள்ளவர்கள் ஷை தொகுதிக்கு ஓட்டுக்கொடுக்கச் சுதந்தரமுண்டு.

## மதராஸ்
## வியாபாரக் கைத்தொழில் தொகுதி (ஸ்பெஷல்)

**யோக்யதாம்சங்கள்**

மதராஸ் வியாபாரச்சபையிலாவது அல்லது அதைச்சேர்ந்த சபையிலாவது மெம்பராயுள்ளவர்கள்.

## மற்றவியாபாரத் தொகுதிகள் (ஸ்பெஷல்)

யோக்யதாம்ச:— மதராஸ் டிரேட் அஸோஸியேஷன்; தென்னிந்திய வியாபாரச்சபை; நாட்டுக்கோட்டை நகரத்தார் சபை இவைகளில் மெம்பராயுள்ளவர்கள்.

1920-ஸூ சீர்திருத்தப் பிரகாரம் பிரதிநிதிகளைத் தேரிந்தெடுத்தல் சம்மந்தமான விவரங்கள்.

| லக்கம் | ஜில்லாக்கள் | ஜனத்தொகை | ரிஜிஸ்டரான ஓட்டர்களின் எண்ணம் | தெரிந்தெடுக்க வேண்டியமெம்பர்கள் | அவர்களில் பிராமணரல்லாதார் | நகரங்களுக்காக | | நிலச்சுவான்தார்களுக்காக | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | ரிஜிஸ்டரான ஓட்டர்கள் | தெரிந்தெடுக்கும் மெம்பர்கள் | ரிஜிஸ்டரான ஓட்டர்களின் எண்ணம் | தெரிந்தெடுக்க வேண்டியமெம்பர் |
| 1 | சென்னை ... | 522,951 | ... | .... | 2 | 16553 | 4 | | |
| 2 | கஞ்சம் ... | 1835562 | 65761 | 3 | 1 | .... | .... | 86 | 1 |
| 3 | விசாகபட்டணம் | 2,231,874 | 70628 | 2 | 1 | 992 | 1 | | |
| 4 | கோதாவரி ... | 1473,860 | 44281 | 2 | 1 | 1287 | 1 | 66 | 1 |
| 5 | கிருஷ்ணா ... | 2133314 | 87669 | 4 | 2 | .... | .... | | |
| 6 | குண்டூர் ... | 1809574 | 83014 | 3 | 1 | .... | .... | | |
| 7 | நெல்லூர் ... | 1385553 | 51795 | 2 | 1 | .... | .... | 95 | 1 |
| 8 | சித்தூர் ... | 1269157 | 39897 | 2 | 1 | .... | .... | | |
| 9 | கடப்பை ... | 887929 | 25156 | 2 | 1 | .... | .... | | |
| 10 | கர்னூல் ... | 868858 | 27666 | 2 | 1 | .... | .... | | |
| 11 | அனந்தப்பூர் ... | 955917 | 23199 | 2 | 1 | .... | .... | | |
| 12 | பல்லாரி ... | 862370 | 27676 | 2 | 1 | .... | .... | | |
| 13 | செங்கற்பட்டு ... | 1493058 | 43426 | 2 | 1 | .... | .... | | |
| 14 | வடஆர்க்காடு ... | 2055594 | 58686 | 3 | 1 | .... | .... | 55 | 1 |
| 15 | தென்னார்க்காடு ... | 2320085 | 58970 | 3 | 1 | .... | .... | | |
| 16 | சேலம் ... | 2112034 | 59323 | 2 | 1 | .... | .... | | |
| 17 | கோயம்புத்தூர் ... | 2219848 | 57075 | 3 | 1 | .... | .... | | |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 18 நீலகிரி .... | 126519 | 1291 | 1 | 1 | .... | .... | | |
| 19 தஞ்சாவூர் .... | 2326265 | 54733 | 3 | 1 | .... | .... | | |
| 20 திருச்சிறுப்பள்ளி ஸ்ரீரெங்கம் .... | 1902838 | 45445 | 2 | 1 | 4507 | 1 | | |
| 21 மதுரை .... | 2007082 | 65489 | 3 | 1 | 6583 | 1 | 56 | 1 |
| 22 ராமநாதபுரம் .... | 1721837 | 46689 | 2 | 1 | .... | .... | | |
| 23 திருநெல்வேலி பாளையங்கோட்டை .. | 1901396 | 44110 | 2 | 2 | 3156 | 1 | | |
| 24 மலையாளம் அஞ்ஞுங்கோ .... | 3095317 | 26901 | 2 | 1 | .... | .... | 200 | 1 |
| 25 தென்கன்னடம்.... | 1247368 | 21139 | 2 | 1 | .... | .... | | |
| | | | 56 | (28) | | 9 | | 6 |

## மஹம்மதியர்கள்.

| தெரிந்தெடுக்கவேண்டிய ஜில்லாக்கள் நகரங்கள் | ரிஜிஸ்டரான ஓட்டர்கள் | தெரிந்தெடுக்க வேண்டிய மெம்பர்கள் |
|---|---|---|
| **நகரங்களுக்காக** | | |
| சென்னை ... | 2839 | 1 |
| மதுரை ... | 1197 | 1 |
| **கிராமத்தொகுதி.** | | |
| 1 கஞ்சம் ... | | |
| 2 விசாகபட்டணம் ... | 3529 | 1 |
| 3 கோதாவரி ... | | |
| 4 கிருஷ்ணா ... | | |
| 1 குண்டூர் ... | | |
| 2 நெல்லூர் ... | 6156 | 1 |
| 3 சித்தூர் ... | | |
| 1 கடப்பை ... | | |
| 2 கர்னூல் ... | | |
| 3 அனந்தப்பூர் ... | 6715 | 1 |
| 4 பல்லாரி ... | | |
| 1 செங்கற்பட்டு ... | 4125 | 1 |
| 2 வட ஆர்க்காடு ... | | |

## இந்தியகிருஸ்தவர்

| தெரிந்தெடுக்கவேண்டிய ஜில்லாக்கள் நகரங்கள் | ரிஜிஸ்டரான ஓட்டர்கள் | தெரிந்தெடுக்க வேண்டிய மெம்பர்கள் |
|---|---|---|
| 1 விசாகபட்டணம் .... | | |
| 2 கோதவரி .... | | |
| 3 கிருஷ்ணா .... | 3848 | 1 |
| 4 குண்டூர் .... | | |
| 5 நெல்லூர் .... | | |
| 1 சித்தூர் .... | | |
| 2 கடப்பை ... | | |
| 3 கர்னூல் .... | | |
| 4 பல்லாரி .... | | |
| 5 அனந்தப்பூர் .... | 3014 | 1 |
| 6 செங்கல்பட்டு .... | | |
| 7 வட ஆர்க்காடு ... | | |
| 8 தென்னார்க்காடு .... | | |
| 9 சென்னை .... | | |

| | | |
|---|---|---|
| 1 தென்னார்க்காடு ...<br>2 சேலம் ...<br>3 கோயம்புத்தூர் ...<br>4 நீலகிரி ... | 4118 | 1 |
| 1 தஞ்சாவூர் ... | 4054 | 1 |
| 1 திருச்சி ...<br>2 மதுரை ... | 3441 | 1 |
| 1 ராமநாதபுரம் ...<br>2 திருநெல்வேலி ... | 5426 | 1 |
| 1 மலபார் அஞ்சங்கோ | 12055 | 2 |
| 1 தென்கன்னடம் .... | 1772 | 1 |
| | | 13 |
| சென்னை வியாபார சங்கம் | 95 | 2 |
| ஹை கொமிஷனர் சங்கம் | 26 | 1 |
| தென்னிந்திய வியாபார சங்கம் .... | 235 | 1 |
| | | 4 |
| நாட்டுக்கோட்டை நகரத்தார் வியாபாரிகள் .... | 619 | 1 |

| | | |
|---|---|---|
| 1 சேலம் ....<br>2 கோயம்புத்தூர் ....<br>3 மலபார் ...<br>4 அஞ்சுங்கோ ....<br>5 தென்கன்னடம் ....<br>6 நீலகிரி ... | 2607 | 1 |
| 1 தஞ்சாவூர் ....<br>2 திருச்சி ....<br>3 மதுரை .... | 4386 | 1 |
| 1 ராமநாதபுரம் ....<br>2 திருநெல்வேலி .... | 5544 | 1 |
| | | 5 |
| தோட்டச்சங்கங்களுக்காக | 349 | 1 |
| சர்வகலா சாலைகளுக்காக | 5463 | 1 |
| ஐரோப்பியர்களுக்காக | 1489 | 1 |
| ஆங்கிலோ இந்தியர்களுக்காக .... | 1399 | 1 |